IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.151/2020

DEPOSITION OF WITNESS P.W.9

| | | |
|---|---|---|
| NAME | : | VENKAT RAGAVAN |
| FATHER'S NAME | : | SAMRAJ |
| VILLAGE | : | THIRUPATHUR |
| OCCUPATION | : | RTO |
| AGE | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 2th day of july 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வட்டார போக்குவரத்து அலுவலராக, வாணியம்பாடியில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 25.06.2019 அன்று குடியாத்தம் பகுதி அலுவலகத்தில் பணிபுரிந்தபோது பரதாராமி காவல் நிலைய உதவி ஆய்வாளர் வேண்டுகோள்கிணங்க குற்ற எண்.103/2019ன் படி TN 69 BH 6250 எண்ணுள்ள சரக்கு வாகனத்தை அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்து அந்த ஆய்வில் வலது முன்புற பம்பர் ஒடுங்கி காணப்பட்டது. கால்தடை திறன் 69% காணப்பட்டது. இதன் அடிப்படையில் இந்த விபத்தானது எந்த வித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்று நான் கருத்துரை வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நான் வழங்கியதுதான். மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே வழக்கில் தொடர்புடைய மற்றொரு இருசக்கர வாகனம் TN 20 BB 5087 கடந்த 18.07.2019 அன்று அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். அந்த ஆய்வில் இடது பக்க cross bar, handle bar மற்றும் sare guard ஆகியவை சேதமடைந்து காணப்பட்டது. கால்தடை திறன் 69% காணப்பட்டது. இதன் அடிப்படையில் இந்த விபத்தானது எவ்வித இயந்திர கோளாரினாலும் ஏற்படவில்லை என்று நான் கருத்துரை வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நான் வழங்கியதுதான். மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.